DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW5 |
| Name | : | முனிரத்தினம் |
| Father's Name | : | ராமப்பன் |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | ஒர்க் ஷாப் கேரேஜ் |
| Age | : | 49 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 04th day of September 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது லக்கபெத்தனப்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் டிசம்பர் 30 ஆம் தேதி காரில் சண்முகத்தின் தங்கை வீட்டிற்கு சென்றோம். சண்முகத்திற்கு சொந்தமான காரை சண்முகம் ஓட்டி வந்தார். நானும், ராமலிங்கமும் பின்னால் உட்கார்ந்து சென்றோம். கந்தன் என்பவர் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு வந்தார். அன்று சுமார் இரவு 07.00 மணிக்கு சென்னசந்திரம் நெடுசாலையில் சென்று கொண்டிருந்த போது, அந்த இடத்தில் வளைவு உள்ளது. அப்போது வேகமாக காரில் வந்த நபர் இடித்து விட்டார். யார் ஓட்டி வந்து இடித்தார்கள் என்று தெரியவில்லை. இடித்தவுடன் மயக்கம் போட்டு விழுந்து விட்டோம். எனக்கு வலது கால் கட் ஆகி விட்டது. ராமலிங்கம் என்பவருக்கும் இடுப்பு மற்றும் காலில் எலும்புமுறிவு ஏற்பட்டது. கந்தன் என்பவருக்கு கையிலும், முகத்திலும் அடிபட்டது. சண்முகம் சம்பவ இடத்திலேயே இறந்து விட்டார். எங்களை அங்கிருந்தவர்கள் ஆம்புலன்ஸ் வரவழைத்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். புகார் யார் கொடுத்தார்கள் என்று தெரியாது. இடித்த நபரை அடையாளம் காட்ட

முடியுமா என்றால் யார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–</u>

சண்முகம் என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். நான் கார் டிங்கரிங் ஒர்க் செய்து பெயிண்ட் அடிப்பேன் என்றால் சரிதான். டிங்கரிங் ஒர்க் செய்து பெயிண்ட் அடிப்பதால் எனக்கு கார் நன்றாக ஓட்டத் தெரியும் என்றால் கார் ஓட்டத் தெரியாது. பொதுவாக காரின் உள்ளே உட்கார்ந்து வரும்போது, இருப்பதால் இரவு சமயத்தில் இரு வாகனமும் லைட் போட்டு வருவதால் எந்த வாகனம் எப்படி வருகிறது என்று தெரியாது என்றால் கொஞ்சம் தெரியாது. அன்று லீவு என்பதால் அவருடன் சென்று வரலாம் என்று சென்றோம். அன்று எலக்சன் விடுமுறை என்பதால் ஒன்றாக இருந்ததால் அவர் சொன்னார் சென்றோம். விபத்து நடந்தது இரவு 07.00 மணி என்றால் சரிதான். இருட்டி விட்டது என்றால் ஆமாம். வளைவான இடத்தில் தான் விபத்து நடந்தது என்றால் சரிதான். பொதுவாக ரோட்டில் வளைவின் குறுக்கு பகுதியில் வேகமாக வந்தால் ஏறிச்செல்ல வேண்டும் என்றாலும்,மெதுவாக வந்தால் இடது பக்கம் ஒட்டினார் போல் செல்ல வேண்டும் என்றால் சரிதான். அதேபோல் எதிர் புறம் வருபவர்கள் வேகமாக வந்தால் அவருக்கு சாலையின் இடது புறம் தான் வரவேண்டும் என்றால் ஆமாம். நான் பின்னால் உட்கார்ந்து வந்ததால் எந்த வண்டி வேகமாக சென்றது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். மருத்துவமனையில் என்னை போலீசார் விசாரித்தார்கள். அதன் பிறகு விசாரணை செய்தார்கள‌ா என்றால் இல்லை.

<u>மறு விசாரணை :–</u>

இல்லை.

M SANTHI
CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW6 |
| Name | : | கந்தன் |
| Father's Name | : | பெரியசாமி |
| Village | : | லக்கபெத்தனப்பள்ளி |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | பெயிண்டிங் |
| Age | : | 47 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 04th day of September 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது கிருஷ்ணகிரி, லக்கபெத்தனப்பள்ளியில் குடியிருந்து வருகிறேன். நான் பெயிண்டிங் வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் டிசம்பர் 30 ஆம் தேதி நான், முனிரத்தினம், சண்முகம், ராமலிங்கம் ஆகியோர் காரில் சண்முகத்தின் தங்கை வீட்டிற்கு சென்றோம். சண்முகம் எடுத்து வந்த காரில் சென்றோம். காரை சண்முகம் ஓட்டி வந்தார். முனிரத்தினமும், ராமலிங்கமும் பின்னால் உட்கார்ந்து வந்தார்கள். நான் முன் சீட்டில் உட்கார்ந்து கொண்டு வந்தேன். அன்று சுமார் இரவு 06.00 – 07.00 மணிக்கு சென்னசந்திரம் நெடுசாலையில் சென்று கொண்டிருந்த போது, விபத்து ஏற்பட்டது. அந்த வழியாக காரில் வந்த நபர் இடித்து விட்டார். அந்த இடத்தில் வளைவு உள்ளது. எதிரே வந்த காரை யார் ஓட்டி வந்து இடித்தார்கள் என்று தெரியவில்லை. இடித்தவுடன் மயக்கம் போட்டு விழுந்து விட்டேன். முனிரத்தினத்திற்கு வலது கால் கட் ஆகி விட்டது. ராமலிங்கம் என்பவருக்கும் இடுப்பு மற்றும் காலில் எலும்புமுறிவு ஏற்பட்டது. எனக்கு கையிலும், முகத்திலும் அடிபட்டது. மூன்று நாட்கள் கழித்து தான் எனக்கு நினைவு வந்தது. எங்கு சண்முகம் இறந்தார் என்று எனக்கு தெரியாது. எங்களை அங்கிருந்தவர்கள்

ஆம்புலன்ஸ் வரவழைத்து கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சேர்த்தார்கள். புகார் யார் கொடுத்தார்கள் என்றால் ஊரில் நிறைய நபர்கள் இருந்தார்கள் யார் என்று தெரியாது. இடித்த நபரை அடையாளம் காட்ட முடியுமா என்றால் யார் என்று தெரியாது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

விபத்து நடந்ததற்கு இழப்பீடு கேட்டு வழக்கு தாக்கல் செய்தேன் என்றால் ஆமாம். பணம் பெற்றுக் கொண்டேன். நாங்கள் மூன்று பேரும் ஒன்றாக இழப்பீடு கேட்டு வழக்கு போட்டோம். எந்த காரின் காப்பீட்டு நிறுவனத்தின் மீது வழக்கு போட்டேன் என்றால் தெரியவில்லை. எனக்கு விவரம் எதுவும் தெரியாது. நான் சென்ற கார் என்ன கார் என்று தெரியாது. எதிரே வந்த காரும் என்ன கார் என்று தெரியாது. சம்பவம் நடந்தது இருட்டான நேரம் என்பதால் எந்த கார் எப்படி வந்தது என்ற விவரமும், யார் வேகமாக ஓட்டினார்கள் என்ற விவரமும் தெரியாது என்றால் சரிதான். சண்முகம் என்பவர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். சண்முகம் அவரது தங்கையை பார்ப்பதற்காக அழைத்து சென்றார். பக்கம் என்பதால் போயிட்டு வந்து விடலாம் என்று கூட்டிக் கொண்டு சென்றார். சண்முகம் என்பவர் தான் வேகமாக ஓட்டிச் சென்று விபத்தை ஏற்படுத்தி விட்டார் என்றால் சரியல்ல. சண்முகம் காரிற்கு காப்பீடு இல்லாததால் எதிரே வந்த வாகனத்தின் மீது செல்வாக்கை பயன்படுத்தி வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்திற்கு பிறகு போலீசார் என்னை விசாரிக்கவில்லை என்றால் விசாரித்தார்கள், அப்போ அப்போ கேட்டுக் கொண்டு தான் இருந்தார்கள். எப்படி அடிபட்டது என்று போலீசார் என்னை கேட்டார்களா என்றால் தெரியவில்லை. விபத்தில் அடிபட்டவர்கள் எனது சொந்தக்காரர்கள் என்பதால் அவர்களுக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>மறு விசாரணை :-</u>

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE,
KRISHNAGIRI.

| | | |
|---|---|---|
| Sessions | : | CC. No. 225 of 2024 |
| Deposition of witness for | : | PW7 |
| Name | : | முனுசாமி |
| Father's Name | : | தேவராஜ் |
| Village | : | அளேசிதாபுரம் |
| Taluk | : | கிருஷ்ணகிரி |
| District | : | கிருஷ்ணகிரி |
| Profession | : | சுவீட் மாஸ்டர் |
| Age | : | 28 |

Solemnly affirmed in accordance with the provisions of Act 44 of 1969 of the 04th day of September 2025.

எதிரி ஆஜர். சாட்சி ஆஜர். சாட்சி சத்திய பிரமாணத்தின் பெயரில் விசாரிக்கப்பட்டார்.

<u>முதல் விசாரணை :–</u>

நான் தற்போது அளேசீதாபுரம், கிருஷ்ணகிரி தாலுகாவில் குடியிருந்து வருகிறேன். நான் சேலத்தில் பேக்கரியில் ஸ்வீட் மாஸ்டராக வேலை செய்து வருகிறேன். கடந்த 2019 ஆம் வருடம் ஓட்டு போடுவதற்காக சொந்த ஊருக்கு வந்தேன். அப்போது எனது தங்கை வீட்டிற்கு வந்தேன். அப்பொழுது ஆஜர் எதிரி எல்லப்பன் பெங்களூரு செல்வதாக என்னை குருபரப்பள்ளியில் இறக்கி விடுவதாக சொன்னார். எனது தங்கை ஊரான நெடுசாலையில் இருந்து கிளம்பி வண்டி எடுத்து 500 மீட்டர் தூரத்திலேயே விபத்து ஏற்பட்டு விட்டது. என் வீட்டிலிருந்து பேருந்தில் வந்தேன். நெடுசாலையில் இருந்து நானும் ஆஜர் எதிரி எல்லப்பன் என்பவரும் வந்தோம். சென்னசந்திரம் கூட் ரோடு அருகில் விபத்து ஏற்பட்டது. எதிரே வாகனம் வந்தது. எல்லப்பன் லைட்டை டிரிம் செய்தார். எதிரே வந்த வாகனத்தில் வந்தவர்கள் எந்த சிக்னலும் கொடுக்கவில்லை. எல்லப்பன் வண்டியை கீழே இறக்கி விட்டார். நேராக வந்து இடித்து விட்டார்கள். எனது அண்ணன் எல்லப்பனுக்கு வலது தோள்பட்டையிலும், எனக்கும் வலது தோள் பட்டையிலும் அடிபட்டது. எதிரே காரில் வந்த நபர்களுக்கு என்ன அடிபட்டது என்று தெரியாது.

விபத்து ஏற்பட்டவுடன் கிருஷ்ணகிரி அரசு மருத்துவமனையில் ஆம்புலன்ஸ் மூலம் சிகிச்சையில் சேர்ந்தனர். இது சம்பந்தமாக போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

எதிரி தரப்பு குறுக்கு விசாரணை :–

எல்லப்பன் வாகனத்தை மெதுவாக தான் ஓட்டி வந்தார் என்றால் சரிதான். எதிரே வாகனத்தை ஓட்டி வந்தவர் தான் வேகமாக வந்து இடித்து விட்டார் என்றாலும் சரிதான். விபத்து ஏற்பட்டவுடன் ஒரே ஆம்புலன்சில் தான் எல்லாரையும் எடுத்து சென்றார்கள். விபத்து நடந்தது இரவு நேரம் என்பதால் யார் என்ற விவரம் எனக்கு தெரியாது. விபத்து ஏற்பட்டவுடன் எல்லப்பன் கோமா நிலைக்கு சென்று விட்டார்.

மறு விசாரணை :–

இல்லை.

M SANTHI

CHIEF JUDICIAL MAGISTRATE,KRISHNAGIRI
Digitally signed by M SANTHI

தலைமை குற்றவியல் நடுவர்,
கிருஷ்ணகிரி.